முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 410/2017

தேதி : 19-09-2025

(வா.சா.3) – திரு.அந்தோனிசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. என்ன பரிகாரம் கோரி வாதி பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தோட்டம் தங்களுக்கு பாத்தியம் என்று சொல்லி. தாவா சொத்து வாதிகளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு வழக்கு சொத்து பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் வழக்கு சொத்தை என் தந்தை 1983ல் கிரையம் வாங்கினார். எந்த ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனார் வாதிகளுக்கு சொத்தை பிரித்து கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது, கூட்டுப்பட்டா வாதிகள் பெயரிலுள்ள இருந்ததாக என் தந்தை சொன்னார், தற்போது என் தந்தை உயிரோடு இல்லை. 1354/2 சொத்து என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1354/2 சொத்து என் தந்தைக்கு பாத்தியப்பட்டதாக சொல்கிறேன் என்றும், அவரின் இறப்பிற்கு பின்னர் சொத்தை பிரித்து கொண்டோமா என்றால் இல்லை, அவர் ஏற்கனவே சொத்தினை விற்றுவிட்டார். தற்போது மேற்படி சொத்து என் தகப்பனார் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

2. வாதிகள் பெயரில் எந்த சொத்து உள்ளது என்றால் சர்வே எண். 1354/1, 3ம் சண்முகத்தின் பெயரிலும் 1354/2 என் தந்தை பெயரிலும் உள்ளது. சண்முகத்தின் பெயரிலுள்ள சொத்தின் பட்டா எண் என்ன என்றால் தெரியாது. நான் தற்போது அவர் சொத்தின் அருகில் குடியில்லை என்றால் சரிதான். நான் தற்போது 1354/1, 3 குடியில்லாதநிலையில் வாதிகள் அந்த சொத்தை அனுபவித்து வருவதாக சொல்வது வாதிக்கு ஆதரவாக என்றும், வாதிகள் அந்த சொத்தில் அனுபவித்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தந்தை 2ம் பிரதிவாதியின் கணவர் 4ம்

பிரதிவாதிக்கு 1995ல் தாவா சொத்து சம்பந்தமாக ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் தந்தை எந்த ஆண்டில் வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் தேதி மாதம் ஞாபகமில்லை, 1989ல் எழுதிக்கொடுத்தார். 4ம் பிரதிவாதிக்கு என் தந்தை பவர் எழுதி கொடுத்த விபரம் தெரியும் என்றால் 2015ல் தெரியும். 2015ல் பவர் பத்திரம் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லியநிலையில் 2010ல் நானும் என் தந்தையும் பவர் பத்திரத்தை ரத்து செய்தோம் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதேபோல் நாங்கள் சொத்தை அனுபவிக்க சென்றபோது அதற்கு 4ம் பிரதிவாதி தடுத்தார் என்று சொல்வது தவறு என்றால்ச ரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு கொடுத்தோம் என்று சொல்வதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. அதேபோல் 4ம் பிரதிவாதிக்கு 2010 லிருந்து சுமார் 10, 15 ஆண்டுக்கு முன்பு குத்தகைக்கு கொடுத்ததாக சொல்லியநிலையில் வாதிகளுக்கு 1989ல் என் தந்தை கிரையம் செய்து கொடுத்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதேபோல் 4ம் பிரதிவாதியிடம் குத்தகைக்கு கொடுத்த நிலத்தை அவர் தரமறுத்தார் என்றும், அப்போதுதான் 4ம் பிரதிவாதி என் தந்தையிடம் பவர் பத்திரம் எழுதி வாங்கிய விபரம் தெரியவந்தது என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதன்பின்னர் பவர் பத்திரத்தை ரத்து செய்து என் தந்தை ஸ்ரீதர் ரெட்டி்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த கிரைய தேதி என்ன என்றால் தேதி, மாதம் தெரியாது, 2014 ஆண்டு, ஆனால் அது பதிவு ஆவணம். மேற்படி பதிவு எப்போது தெரியும் என்றால் 2017ல் தெரியும். என் தந்தை வழக்கு சொத்தை வாதிகளுக்கு 1989லும், ஸ்ரீதர் ரெட்டிக்கு 2014லும் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என் தந்தை மாறிமாறி ஆவணங்கள் எழுதிக்கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமால் என்ன என்றால் கிழக்கு பக்கம் – சண்முகம் ஐயா நிலம், மேற்கு பக்கம் – மேர்த்தற்காடு, தெற்கு பக்கம் – துரையா காடு, வடக்கு பக்கம் – துரையா காடு உள்ளது. வழக்கு சொத்து விபரம் எனக்கு தெரியாது என்றும், நான் வாதிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.